

தருமபுரியில் வேளாண்மை துறை சார்பில் தருமபுரி, கிருஷ்ணகிரி, திருப்பத்தூர் மற்றும் திருவண்ணாமலை மாவட்ட விவசாயிகள், உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள் மற்றும் ஏற்றுமதியாளர்களுக்கான வேளாண் விளைபொருள் ஏற்றுமதி மேம்பாட்டு கருத்தரங்கினை நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அமைச்சர் கே.என்.நேரு, வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் ஆகியோர் தொடங்கி வைத்து, விவசாயிகளுக்கு ரூ.34.31 இலட்சம் மதிப்பீட்டில் அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்கள்.உடன் மாவட்ட ஆட்சியர் சாந்தி, நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.மணி, சட்டமன்ற உறுப்பினர்கள் வெங்கடேஸ்வரன், ஜி.கே.மணி, மாவட்டக் கழகச் செயலாளர்கள் தடங்கம்.பெ.சுப்ரமணி, முனைவர்.பி.பழனியப்பன், முன்னாள் எம்.பி.தாமரைச்செல்வன், முன்னாள் மாவட்டச் செயலாளர் பி.என்.பி.இன்பசேகரன், நகர் மன்ற தலைவர் லட்சுமி மாது, நகர செயலாளர் நாட்டான் மாது மற்றும் கழகத்தினர், பொது மக்கள் உள்ளனர்.



கழகத் தலைவர், முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி பிற்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் முன்னிலையில் நடைபெற்ற புதுக்கோட்டை தெற்கு மாவட்டம் ஆலங்குடி சட்டமன்றத் தொகுதி பார்வையாளர் அறிமுக கூட்டத்தில் சட்டத்துறை அமைச்சர், தெற்கு மாவட்டக் கழகச் செயலாளர் எஸ். ரகுபதி கலந்து கொண்டு கழக நிர்வாகிகள், முன்னோடிகள், பாக முகவர்கள் மற்றும் பூத் கமிட்டி உறுப்பினர்களிடையே உரையாற்றினார். இந்நிகழ்வுகளில் ஆலங்குடி தொகுதி பார்வையாளர், கழக கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை மாநில துணைச் செயலாளர் எழில்மாறன் செல்வேந்திரன், மாவட்ட துணைச் செயலாளர்கள் ஞான.இளங்கோவன், ஸ்ரீதேவி அண்ணா துரை, ஒன்றிய கழகச் செயலாளர்கள் கே.பி.கே.டி.தங்கமணி, அரு.வடிவேல், கே.எஸ்.ரவி, எல்.குமார் (எ) துரைக்கண்ணு, பொதுக்குழு உறுப்பினர்கள் சீனி. பழனியப்பன், ஆர்.வி. செல்வம், கே.எம்.சுப்பிரமணியன், அறந்தாங்கி.ஒன்றிய குழுத் தலைவர் மகேஸ்வரி சண்மு கநாதன், பேரூர் கழக செயலாளர் கே.சி.சிவகுமார், ஆ.பழனிக்குமார் மாவட்ட கவுன்சிலர் உஷா செல்வம், ராம.தமிழரசன், ரெத்தினவேல் கண்டியர் மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.

### அமைச்சர் எஸ்.ரகுபதி தலைமை! புதுக்கோட்டை தெற்கு மாவட்டம் –

# ஆலங்குடி சட்டமன்றத் தொகுதி பார்வையாளர் அறிமுகக் கூட்டம்!

## அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் முன்னிலை! எழில்மாறன் செல்வேந்திரன் சிறப்புரை!

புதுக்கோட்டை அக் 26-

புதுக்கோட்டை தெற்கு மாவட்டம் ஆலங்குடியில் சட்டமன்றத் தொகுதி பார்வையாளர் அறிமுகக் கூட்டம் மாவட்ட கழக செயலாளர் சட்டம் நீதிமன்றம் சிறைத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி தலைமையில், பிற்படுத்தபட்டோர் நலத் துறை அமைச்சர் சிவ. வீ.மெய்யநாதன் முன்னிலையில் ஆலங்குடி தனியார் திருமண மண்டபத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வுகளில் ஆலங்குடி தொகுதி பார்வையாளர், கழக கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை மாநில துணைச் செயலாளர் எழில் மாறன் செல்வேந்திரன், மாவட்ட துணைச் செயலாளர்கள் ஞான.இளங்கோவன், ஸ்ரீதேவி அண்ணாதுரை, ஒன்றிய கழகச் செயலாளர்கள் கே.பி. கே.டி.தங்கமணி, அரு.வடிவேல், கே.எஸ்.ரவி, எல். குமார் (எ) துரைக்கண்ணு, பொதுக்குழு உறுப்பினர்கள் சீனி. பழனியப்பன், ஆர்.வி. செல்வம், கே.எம். சுப்பிரமணியன் , அறந்தாங்கி.ஒன்றிய குழுத் தலைவர் மகேஸ்வரி சண்முகநாதன், பேரூர் கழக செயலாளர் கே.சி.சிவகுமார், ஆலங்குடி பேரூராட்சி தலைவர் ராசி.முருகானந்தம்

மாவட்ட அணிகள் அமைப்பாளர்கள் செந்தாமரை பாலு, இரா. மேகநாதன், பாத்திமா பீவி, எம்.ஜி (எ)ராமச்சந்திரன், மாவட்ட கவுன்சிலர் உஷா செல்வம், ராம.தமிழரசன், ரெத்தினவேல் கண்டியர், செங்கோல், வீரச் செல்வம். மற்றும் மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் நகர கழக செயலாளர்கள் மாவட்ட பிரதிநிதிகள் அனைத்து கிளைக்கழக செயலாளர்கள் BL 2 முகவர்கள் கழக முன்னோடிகள் கலந்து கொண்டு சிறப்பித்தனர். முடிவில் ஆலங்குடி பேரூர் கழக செயலாளர் ஆ.பழனிக்குமார் நன்றி கூறினார்.

# தஞ்சை மத்திய மாவட்ட தி.மு.க. செயற்குழுக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் துரை.சந்திரசேகரன் எம்.எம்.ஏ. அறிவிப்பு!

தஞ்சை, அக். 26-

தஞ்சை மத்திய மாவட்டச் செயலாளர் துரை சந்திரசேகரன் எம்.எல்.ஏ. விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

இன்று (26.10.2024 - சனிக்கிழமை) காலை 10.00 மணியளவில் தஞ்சாவூர், மாவட்டக் கழக அலுவலகம், கலைஞர் அறிவாலயத்தில் மாவட்ட அவைத்தலைவர் சி.இறைவன் தலைமையில் மாவட்டச் செயற்குழு கூட்டம் நடைபெற உள்ளது.



இக்கூட்டத்தில் தலைமைக் கழகத்தால் நியமிக்கப் பட்டுள்ள தொகுதி மேற்பார்வையாளர்கள் தஞ்சாவூர் தொகுதி ஏ.கே.எஸ். விஜயன், ஒரத்தநாடு தொகுதி பரணி இ.எ.கார்த்திகேயன், திருவையாறு தொகுதி பி.கேசவன் ஆகியோர் பங்கேற்க உள்ளனர்.

அதுசமயம் கூட்டத்தில் முன்னாள், இந்நாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், மாநில, மாவட்ட நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், மாநகர, ஒன்றிய, பகுதி மற்றும் பேரூர் செயலாளர்கள், மாநகரக் கழக நிர்வாகிகள், மாவட்ட அணி அமைப்பாளர்கள் மற்றும் சிறப்பு அழைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ள வேண்டுகிறேன்.

பொருள் :-

1. தமிழ்நாடு துணை முதல்வர் - மாநில இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நவம்பர் 07 தஞ்சை வருகை.

2. தமிழ்நாடு துணை முதல்வர் - மாநில இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நவம்பர் 27 பிறந்தநாள் விழா.

3. தொகுதி மேற்பாவையாளர்கள் அறிமுகம்.

4. வாக்காளர் பட்டியல் சரிப்பார்த்தல் சிறப்பு முகாம் 2024 நவம்பர் 9,10,23,24 தேதி.

5. OMR. படிவம்.

6. கட்சி வளர்ச்சி நிதி தொடர்பாக.

7.கழக ஆக்கப்பணிகள்.

இவ்வாறு அவர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

### தருமபுரி மாவட்டம் அரூர் – மாரண்டஅள்ளி பேரூராட்சிகளில்

# ரூ.4.09 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்தப்பட்ட பேருந்து நிலையங்கள்!

## அமைச்சர்கள் கே.என்.நேரு – எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் திறந்து வைத்தனர்!

தருமபுரி, அக். 26-

முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அமைச்சர் கே.என்.நேரு, வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் ஆகியோர் தருமபுரி மாவட்டம், அரூரில் பேரூராட்சிகள் துறை சார்பில் நடைபெற்ற விழாவில் அரூர், மாரண்டஅள்ளி பேரூராட்சிகளில் ரூ.4.09 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்தப்பட்ட பேருந்து நிலையங்களை திறந்து வைத்தும், பொ.மல்லாபுரம், கம்பைநல்லூர், காரிமங்கலம், பாலக்கோடு, மாரண்டஅள்ளி உள்ளிட்ட பேரூராட்சிகளில் ரூ.38.00 இலட்சம் மதிப்பீட்டில் 2 முடிவுற்ற பணிகளை திறந்து வைத்தும், ரூ.10.17 கோடி மதிப்பீட்டில் 8 புதிய பணிகளுக்கு அடிக்கல் நாட்டியும், 1725 பயனாளிகளுக்கு ரூ.9.72 கோடி மதிப்பீட்டில் அரசு நலத்திட்ட உதவிகளை நேற்று முன்தினம் (24.10.2024) வழங்கினார்கள்.

இந்நிகழ்வுகளுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.கி.சாந்தி, தலைமை வகித்தார். மேலும், பேரூராட்சிகள் துறை இயக்குநர் கிரண்குராலா, இ.ஆ.ப., தருமபுரி நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.மணி , பென்னாகரம் சட்டமன்ற உறுப்பினர்ஜி.கே.மணி, தருமபுரிசட்டமன்ற உறுப்பினர் எஸ்.பி. வெங்கடேஷ்வரன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

தருமபுரி மாவட்டம், அரூர் பேரூராட்சியில் கலைஞர் நகர்புற மேம்பாடு திட்டத்தின் கீழ், ரூ.3.62 கோடி மதிப்பீட்டில் நவீனப்படுத்தப்பட்ட பேருந்து நிலையத்தினையும், கம்பைநல்லூர் பேரூராட்சி, வார்டு எண்.4, செல்லியம்மன் நகரில் அம்ருத் 2.0 திட்டத்தின் கீழ் ரூ.16.00 இலட்சம் அமைக்கப்பட்டுள்ள பூங்காவினையும், பொ.மல்லாபுரம் பேரூராட்சி, வார்டு எண்.1, தருமபுரி சாலையில் கலைஞர் நகர்புற மேம்பாடு திட்டத்தின் கீழ் ரூ.22.00 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள பூங்காவினை யும் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அமைச்சர் கே.என்.நேரு , வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் ஆகியோர் திறந்து வைத்தார்கள்.

தருமபுரி மாவட்டம், மாரண்டஅள்ளி பேரூராட்சியில் இயக்கம் மற்றும் பராமரிப்பு திட்டத்தின் கீழ், ரூ.47.00 இலட்சம் மதிப்பீட்டில் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப் பட்டுள்ள பேருந்து நிலையத்தினை திறந்து வைத்தும், மாரண்டஅள்ளி பேரூராட்சியில் மூலதன மான்ய நிதி திட்டத்தின் கீழ், ரூ.90.00 இலட்சம் மதிப்பீட்டிலான புதிய அலுவலக கட்டிடத்திற்கும், காரிமங்கலம் பேரூராட்சியில் மூலதன மான்ய நிதி திட்டத்தின் கீழ், ரூ.95.00 இலட்சம் மதிப்பீட்டிலான புதிய அலுவலக கட்டிடத்திற்கும், காரிமங்கலம் பேரூராட்சி, அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளியில் 6-வது நிதிக்குழு மான்ய நிதி திட்டத்தின் கீழ், ரூ.1.14 கோடி மதிப்பீட்டிலான 6 புதிய வகுப்பறை கட்டிடங்களுக்கும், காரிமங்கலம் பேரூராட்சியில் தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ், ரூ.2.74 கோடி மதிப்பீட்டிலான திரவக்கழிவு மேலாண்மை திட்டம் செயல்படுத்துதல் பணிக்கும், பாலக்கோடு பேரூராட்சியில் மூலதன மான்ய நிதி திட்டத்தின் கீழ், ரூ.1.39 கோடி மதிப்பீட்டிலான புதிய அலுவலக கட்டிடத்திற்கும், பாலக்கோடு பேரூராட்சியில் கலைஞர் நகர்புற மேம்பாடு திட்டத்தின் கீழ், ரூ.48.00 இலட்சம் மதிப்பீட்டிலான தக்காளி சந்தை மேம்பாடு பணிக்கும், பாலக்கோடு பேரூராட்சியில் மூலதன மான்ய நிதி திட்டத்தின் கீழ், ரூ.50.00 இலட்சம் மதிப்பீட்டிலான ஆடு அடிக்கும் தொட்டி கட்டுதல் பணிக்கும், பாலக்கோடு பேரூராட்சி, அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் 6-வது நிதிக்குழு மான்ய திட்டத்தின் கீழ், ரூ.2.07 கோடி மதிப்பீட்டிலான 12 புதிய வகுப்பறை கட்டிடங்களுக்கும் என மொத்தம் ரூ.10.17 கோடி மதிப்பீட்டிலான 8 புதிய பணிகளுக்கு நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அமைச்சர் கே.என்.நேரு, வேளா ண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் ஆகியோர் அடிக்கல் நாட்டி வைத்தார்கள்.

மேலும், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அமைச்சர் கே.என்.நேரு, வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம். ஆர்.கே.பன்னீர்செல்வம் ஆகியோர் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறையின் சார்பில் 1632 பயனாளிகளுக்கு ரூ.7.74 கோடி மதிப்பில் இலவச வீட்டுமனை பட்டாக்கள், இணையவழி பட்டாக்கள், உழவர் பாதுகாப்பு திட்டத்தின் கீழ் ஈமச்சடங்கு மற்றும் திருமண உதவித்தொகைகள், பட்டா மாறுதல்கள், மின்னணு குடும்ப அட்டைகளையும், “மக்களுடன் முதல்வர்” திட்ட முகாம்களில் கோரிக்கை மனுக்கள் வழங்கி, பயன் பெற்ற பயனாளிகளில் கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறையின் சார்பில் 68 பயனாளிகளுக்கு ரூ.72.33 இலட்சம் மதிப்பில் மகளிர் சுய உதவிக்குழு கடன், பயிர்கடன்களையும், மருத்துவம் - மக்கள் நல்வாழ்வுத்துறையின் சார்பில் 25 பயனாளிகளுக்கு தலா ரூ.5.00 இலட்சம் மதிப்பில் மருத்துவ காப்பீடு என ரூ.1.25 கோடி மதிப்பில் முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுதிட்ட அட்டைகள் என மொத்தம் 1725 பயனாளிகளுக்கு ரூ.9.72 கோடி (ரூ.9,71,88,700/-) மதிப்பீட்டில் பல்வேறு அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்கள்.

இந்நிகழ்ச்சியில் முன்னாள் அமைச்சர் முனைவர்.பி.பழனியப்பன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் தடங்கம். பெ.சுப்பிரமணி, ஒகேனக்கல் கூட்டுகுடிநீர் திட்டம் மேலாண் இயக்குநர் தட்சிணாமூர்த்தி, உதவி இயக்குநர் (பேரூராட்சிகள்) செ. கணேஷ், கைம்பெண் நல வாரிய உறுப்பினர் திருமதி. ரேணுகாதேவி, பழங்குடியினர் நல வாரிய உறுப்பினர் குணசேகரன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் மனோகரன், இன்பசேகரன், பேரூராட்சி தலைவர் திருமதி. இந்திராணி, செயல் அலுவலர் முத்து உட்பட அரசுத்துறை அலுவலர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

### முரசொலி பிழை திருத்துநர் பிரிவில் பணியாற்றும்

# தி.சுபாராணி தந்தை பி.ஜெயராமன் மறைவு!

மதுரை, அக்.26-

முரசொலி பிழை திருத்துநர் பிரிவில் பணியாற்றும் தி.சுபாராணியின் தந்தை பி.ஜெயராமன் அவர்கள் மறைவெய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.



முரசொலி பிழை திருத்துனர் பிரிவில் பணியாற்றும் தி.சுபாராணியின் தந்தை பி.ஜெயராமன் அவர்கள் (வயது 73) 22.10.2024 செவ்வாய்க்கிழமை அன்று உடல்நலக் குறைவால் மதுரையில் மறைவெய்தினார்.

அன்னாரின் இறுதி நிகழ்வுகள் 23.10.2024 அழகர் நகர், சிந்தாமணி ரோடு, மதுரையில் நடைபெற்றது.

மறைவெய்திய பி.ஜெயராமனுக்கு விஜயலட்சுமி என்ற மனைவியும், பாண்டிச்செல்வி - (ரவிச்சந்திரன்), சுபாராணி - (தியாகராஜன்), தீபா ராணி - (சத்தீஷ்குமார்) ஆகிய மகள்களும், பாண்டியராஜன் - (ஜோதி) என்ற மகனும் உள்ளனர்.



முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கினங்க கடலூர் மாவட்டம் திட்டக்குடி சட்டமன்றத் தொகுதி மங்களூர் ஒன்றியம் புலிவலம் ஊராட்சியில் வெலிங்டன் ஏரியிலிருந்து உபரி நீர் வெளியேற்றும் பகுதியில் தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் சி.வெ. கணேசன் பனை விதை நடும் பணியை துவக்கி வைத்தார். உடன் மாவட்ட கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி / திட்ட இயக்குநர்) திருமதி. இரா. சரண்யா, மங்களூர் கிழக்கு ஒன்றியக் கழகச் செயலாளர் பட்டூர் வீர.அமிர்தலிங்கம், திட்டக்குடி நகர மன்ற துணைத் தலைவர் நகரக் கழகச் செயலாளர் வி.பி.பி.பரமகுரு, திட்டக்குடி நகர மன்றத் தலைவர் வெண்ணிலா கோதண்டம், மங்களூர் ஒன்றியக் குழு பெருந்தலைவர் சுகுணா கே.என்.டி. சங்கர் மற்றும் ஒன்றிய கழக நகரக் கழக நிர்வாகிகள் உள்ளனர்.



நீலகிரி மாவட்டம், குன்னூர் சட்டமன்றத் தொகுதி நிர்வாகிகள் கூட்டம் தொகுதி பார்வையாளர் கோவை அ.திராவிட மணி மற்றும் குன்னூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட கழக நிர்வாகிகள், நகர ஒன்றிய, பேரூர் கழக செயலாளர்கள் முன்னிலையில் நடைபெற்றது. கூட்டத்தில் 2026 சட்டமன்றத் தேர்தல் பணிகள் குறித்து தமிழ்நாடு அரசு தலைமைக் கொறடா கா. ராமச்சந்திரன், மாவட்டக் கழகச் செயலாளர் பா.மு. முபாரக் இணைந்து கழக நிர்வாகிகளுடன் கலந்துரையாடினார்.